**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender :**
**Miscellaneous : CC.No.98/2025**
**Preliminary Register :**
**Police Station : Neelangarai PS**

**Deposition of witness for :LW1/PW1**
**:**

**Name :** சுமேஷ் குட்டி
**:**

**:**
**Village :**
**Taluk :**
**Caste :**
**Calling :**
**Religion :**
**Age :**

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.03.2026.**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

<u>அரசு தரப்பு முதல் விசாரணை</u>

1. நான் ஆதம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் தனியார் நிறுவனத்தில் பணிபுரிந்து வருகிறேன். கடந்த 31.3.2024 அன்று நான் எனது குடும்பத்தாரான எனது மனைவி, எனது அண்ணன், எனது அண்ணி ஆகியோருடன் விஜிபி அம்யூஸ்மென்ட் பார்க்கிற்க்கு சென்றிருந்தோம். அப்பொழுது லாக்கரில் எனது மனைவி மற்றும் அண்ணியின் தங்க செயினை சுமார் தலா மூன்று சவரன் கூடிய இரண்டு தங்க செயின்களை லாக்கரில் வைத்துவிட்டு சென்றோம். அந்த லாக்கர் அங்கு நீச்சல் குளம் அருகில் உள்ளது.

2. காலை 10:30 மணி முதல் 11 மணி அளவில் வைக்கப்பட்ட செயின் மற்றும் செல்போன் ஆகிவிட்டதை வைத்துவிட்டு திரும்ப 5.00 முதல் 5.30 அளவில் லாக்கரை திறந்து பார்த்த பொழுது அதில் எங்களுடைய செல்போன் மட்டும்தான் இருந்தது, காணாமல் போயிருந்தது. அதைக் குறித்து விஜிபி நிறுவனத்திடம் கேட்ட பொழுது அவர்கள் சரிவர பதில் அளிக்காததால் அன்றைய தினமே நீலாங்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். போலீசார் விசாரிப்பதாக கூறிவிட்டு கடந்த 7.4.2024 அன்று எங்களுக்கு போன் செய்தார்கள். 8.4.2024 அன்று நாங்கள் காவல் நிலையத்திற்கு சென்றோம். அங்கு ஆஜர் எதிரியை பார்த்தேன்.

3. எனது மனைவி மற்றும் எனது அண்ணியின் தங்க செயின்களை பார்த்து அடையாளம் காண்பித்தேன். தற்பொழுது என்னிடம் காட்டப்படும் புகார் நான் கொடுத்தது தான். அதில் உள்ள கையெழுத்து என்னுடைய தான். அதில் உள்ள விவரங்கள் எனக்கு தெரியும். அந்த புகார் அ.த.சா.ஆ 1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்கச் சங்கிலி எங்களுடையது தான். அந்த புகைப்படம் அ.த.சா.ஆ 2 ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த தங்கச் சங்கிலியை நான் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்து திரும்பப் பெற்றுக் கொண்டேன். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர்.

<u>எதிர் தரப்பு குறுக்கு விசாரணை</u>

நான் செயின் மற்றும் பொருட்களை வைத்த லாக்கரின் சாவி என்னிடம் தான் இருந்தது என்றால் சரிதான். சம்பவம் நடந்த பொழுது அந்த சம்பவத்தை நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான். போலீசார் சொன்னதன் பெயரில் தான் ஆஜர் எதிரி இந்த வழக்கில் உள்ளார் என்ற விவரம் எனக்கு தெரியும் என்றால் சரிதான். அப்பொழுது அங்கு நிறைய நபர்கள் இருந்தார்கள் என்றால் சரிதான். நான் சொல்வது போல்

லாக்கரில் தங்க நகை வைத்திருந்தால் அந்த நிர்வாகம் உங்களுக்கு பதில் அளித்து இருக்கும் என்பதால் நான் சொல்வது போல் லாக்கரையில் பொருள் வைக்கவில்லை என்றால் சரியல்ல. அந்த பொருளை வேறு இடத்தில் தவறவிட்டதால் அந்த பொருளை ஆஜர் எதிரி தான் எடுத்தார் என்று எனக்கு பொய்யான தகவல் கொடுத்துள்ளனர் என்றால் சரியல்ல.

**மறுவிசாரணை :** இல்லை

**Sd/– M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நீதிமன்றம்,**
**சோழிங்கநல்லூர்.**

**Crl.Misc.39**

**Chapter XXIII code of Criminal procedure**
**DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE,**
**SHOLINGANALLUR**
**DEPOSITION OF WITNESS**

**Calender** :
**Miscellaneous** : **CC.No.98/2025**
**Preliminary Register** :
**Police Station** : **Neelangarai PS**

**Deposition of witness for** **:LW2/PW2**
:

**Name** **:** நித்யா
:

:
**Village** :
**Taluk** :
**Caste** :
**Calling** :
**Religion** :
**Age** :

**Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 13.03.2026.**
**(எதிரி ஆஜர் , எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்)**

அரசு தரப்பு முதல் விசாரணை

1.நான் ஆதம்பாக்கத்தில் வசித்து வருகிறேன். நான் இல்லத்தரசியாக உள்ளேன். கடந்த 31.03.2024 தேதி என்று நாங்கள் விஜிபிக்கு சென்றோம். நானும் எனது கணவரும் எனது கணவரின் அண்ணியும் சென்றோம். அப்பொழுது அங்கு தண்ணீரில் விளையாடுவதற்கு செல்வதற்கு முன்பு மாலை 4.30 மணி அளவில் அங்குள்ள லாக்கரில் எனது செல்போன் பர்ஸ் மற்றும் எனது தங்கச் செயின் மற்றும் எனது கணவரின் அண்ணியின் தங்கச் செயின் ஆகியவற்றை வைத்து விட்டு திரும்ப 5.30

முதல்6.00 மணி அளவில் வந்து பார்த்த பொழுது செல்போன் மற்றும் பர்ஸ் இருந்தது. ஆனால் தங்க செயின்கள் காணாமல் போயிருந்தது.

2. அதன் பின்பு விஜிபி நிறுவனத்திடம் அதைப் பற்றி தெரிவித்த போது அவர்கள் சரியான பதில் தராததால் நீலாங்கரை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தோம். அவர்கள் கடந்த 8.4.2024 அன்று எங்கள் தங்க நகை கிடைத்து விட்டதாக கூறியதால் காவல் நிலையம் நானும் எனது கணவரும் சென்று நீங்கள் தங்க நகையை அடையாளம் காட்டி நீதிமன்றத்தில் மனுதாரர் செய்து பெற்றுக் கொண்டோம். அப்பொழுது ஆஜர் எதிரி காவல்நிலையத்தில் இருந்தார். அவர்தான் திருடியதாக போலீசார் தெரிவித்தனர். இந்த வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தனர். தற்போது என்னிடம் காட்டப்படும் புகைப்படத்தில் உள்ள தங்கச் சங்கிலி என்னுடையது மற்றும் எனது கணவரின் அண்ணி உடையது.

<u>எதிரி தரப்பு குறுக்கு விசாரணை</u>

1. அந்த லாக்கரில் செல்போன் மற்றும் பர்ஸ் ஆகியவற்றை திருடாமல் இருந்தது அப்பொழுது அந்த லாக்கர் மூடி தான் இருந்தது என்றால் சரிதான். எங்களிடமிருந்து சாவியை வைத்து தான் ஓபன் செய்தேன் என்றால் சரிதான். நான் எனது தங்கச் சங்கலியை அந்த லாக்கரில் வைக்கவில்லை வேறு எங்கோ தவற விட்டுவிட்டு எனது கணவர் கூறியதன் பெயரில் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நீதிமன்றத்தில் அடையாளம் காட்டிய தங்கச் சங்கிலியை எதிரி எடுக்கும் பொழுது நான் நேரில் பார்க்கவில்லை என்றால் சரிதான்.

2. ஆஜர் எதிரிக்கும் இந்த வழக்கத்திற்கும் எந்த சம்பந்தமும் இல்லை. நான் புகார் என்ற காரணத்தினால் அதற்கு ஆதரவாக பொய்யாக சாட்சி அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் சொல்வது போல் உண்மையாக லாக்கரையில் இருந்து

பொருட்கள் காணாமல் போயிருந்தால் லாக்கரையில் இருந்த மற்ற பொருட்களும் திருடு போயிருக்கும் அதனால் நான் சொல்வது பொய் என்றால் சரி அல்ல.

**<u>மறுவிசாரணை :</u>** இல்லை

**Sd/– M.N.ராஜநந்திவர்மசிவா,**
**மாவட்ட உரிமையியல் மற்றும்**
**குற்றவியல் நீதிமன்றம்,**
**சோழிங்கநல்லூர்.**